**பெருநகர சென்னை மாநகராட்சி**
**செய்தி வெளியீடு**

செ.வெ.எண். 298 நாள்: **16.07.2026**

**சென்னை மற்றும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளில் வடகிழக்குப் பருவமழை முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக மேற்கொள்ளப்பட்டு வரும் பணிகள் குறித்த ஆய்வுக்கூட்டம் மாண்புமிகு பொதுப்பணி மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் திரு.ஆதவ் அர்ஜூனா அவர்கள் தலைமையில் இன்று நடைபெற்றது.**

சென்னை மற்றும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளில் வடகிழக்குப் பருவமழை முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக பெருநகர சென்னை மாநகராட்சி, நீர்வளத்துறை, நெடுஞ்சாலைத்துறை, சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம், சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியம், தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம், தாம்பரம் மற்றும் ஆவடி மாநகராட்சிகள் ஆகியவற்றின் சார்பில் மேற்கொள்ளப்பட்டு வரும் முன்னேற்பாட்டுப் பணிகள் குறித்த ஆய்வுக்கூட்டம் மாண்புமிகு பொதுப்பணி மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் திரு.ஆதவ் அர்ஜூனா அவர்கள் தலைமையில், இன்று (16.07.2026) தலைமைச் செயலகக் கூட்டரங்கில் நடைபெற்றது.

**இக்கூட்டத்தில், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவித்ததாவது:**

**பெருநகர சென்னை மாநகராட்சி**

சென்னை மற்றும் சுற்றியுள்ள பகுதிகளில் நீர்வளத்துறையின் சார்பில் 59.59 கி.மீ. நீளத்திலான 3 ஆறுகள், 85.56 கி.மீ. நீளத்திலான 12 கால்வாய்கள், பெருநகர சென்னை மாநகராட்சியின் சார்பில் 81.81 கி.மீ. நீளத்திலான 44 கால்வாய்கள், 3,040 கி.மீ. நீளத்திலான 11,770 மழைநீர் வடிகால்கள், நெடுஞ்சாலைத்துறையின் சார்பில் 237 கி.மீ. நீளத்திலான 42 மழைநீர் வடிகால்கள் உள்ளன.

திருவொற்றியூர், மணலி, மாதவரம், திரு.வி.க.நகர் (பகுதி), அண்ணாநகர் (பகுதி) மண்டலங்களில் கொசஸ்தலையாறு வடிநிலப் பகுதிகளில் ரூ.3,059 கோடி மதிப்பீட்டில் ஒருங்கிணைந்த மழைநீர் வடிகால் பணிகளும், ஆலந்தூர், பெருங்குடி மற்றும் சோழிங்கநல்லூர் மண்டலங்களில் கோவளம் வடிநிலப்பகுதிகளில் ரூ.1,357.60 கோடி மதிப்பீட்டில் ஒருங்கிணைந்த மழைநீர் வடிகால் பணிகளும், சென்னையின் பல்வேறு இடங்களில் மூலதன நிதியில் ரூ.756.96 கோடி மதிப்பீட்டில் மழைநீர் வடிகால் பணிகள் மற்றும் ரூ.295.25 கோடி மதிப்பீட்டில் கால்வாய் மேம்பாட்டுப் பணிகளும், ரூ.136.18 கோடி மதிப்பீட்டில் குளங்கள் மேம்பாட்டுப் பணிகள், கோடம்பாக்கம் பாலம் முதல் போரூர் சந்திப்பு வரை ரூ.103 கோடி மதிப்பீட்டில் மற்றும் மாதவரம் முதல் புழல் உபரிநீர் கால்வாய் வரை ரூ.22.88 கோடி மதிப்பீட்டிலும் மழைநீர் வடிகால் பணிகளும், மழைநீரினை சேமிக்கும் வகையில் ரூ.34.15 கோடி மதிப்பீட்டில் நீர் உறிஞ்சும் பூங்காக்களும், ரூ.58.33 கோடி மதிப்பீட்டில் கடப்பாக்கம் ஏரி புனரமைப்பு மற்றும் மேம்பாட்டுப் பணிகளும் நடைபெற்று வருகிறது.

மாநகராட்சிப் பகுதிகளில் உள்ள 33 கால்வாய்களில் மேற்கொள்ளப்பட்டு வரும் மேம்பாட்டுப் பணிகளில் 21 கால்வாய்களில் பணிகள் முடிக்கப்பட்டு, 12 கால்வாய்களில் பணிகள் நடைபெற்று வருகிறது. இதில் 33,368 மீ. நீளத்திலான கால்வாய்களில் 15,577 மீ. நீளத்தில் மேம்பாட்டுப் பணிகள் மேற்கொள்ள எடுத்துக் கொள்ளப்பட்டு, அவற்றில் 11,561 மீ. நீளத்தில் மேம்பாட்டுப் பணிகள் முடிக்கப்பட்டுள்ளன.

மேலும், ரூ.22.55 கோடி மதிப்பீட்டில் 8,090 தெருக்களில் உள்ள 1,675.27 கி.மீ. நீளத்திலான மழைநீர் வடிகால்களில் தூர்வாரும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேலும், 1,09,975 வண்டல் வடிகட்டித் தொட்டிகளில் 68,281 வண்டல் வடிகட்டித் தொட்டிகளில் தூர்வாரும் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. 41,694 வண்டல் வடிகட்டித் தொட்டிகளில் தூர்வாரும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

நீர்வழிக்கால்வாய்கள், ஏரிகள் மற்றும் ஆறுகளில் உள்ள ஆகாயத்தாமரைகள் மற்றும் வண்டல்கள் அகற்றும் பணிகளில் 2 ஆம்பிபியன், 3 ஆம்பிபியன் எஸ்கவேட்டர், 6 ரொபோடிக் மல்டிபர்பஸ் எஸ்கவேட்டர், 3 மினி ஆம்பிபியன், 7 சூப்பர் சக்கர் வாகனங்கள் பயன்படுத்தப்படுகிறது. மேலும் 15 நடமாடும் உயர்கோபுர மின்விளக்குகள், 15 மர அறுக்கும் சக்திமான் வாகனங்கள், 231 மர அறுவை இயந்திரங்கள், 52 டெலஸ்கோபிக் மர அறுவை இயந்திரங்கள், 5 வாகனங்களில் பொருத்தப்பட்ட மர அறுவை இயந்திரங்கள், 6 ஜே.சி.பி., 76 பாப்காட் வாகனங்கள், 86 டிப்பர் லாரிகள், 1 டெலி ஹேண்ட்லர், 5 மின் ஏணிகள் உள்ளிட்டவை தயார்நிலையில் உள்ளன.

மாநகராட்சியின் சார்பில் பல்வேறு குதிரைத் திறன்கள் கொண்ட 525 மோட்டார் பம்புகள், 188 மின் மோட்டார் பம்புகள், வாடகை முறையில் அதிக குதிரைத் திறன் கொண்ட 150 மோட்டார் பம்புகள், 600 டிராக்டர் மோட்டார் பம்புகள் உள்ளன.

மழைக்காலங்களில் தாழ்வான பகுதிகளில் பொதுமக்களை மீட்டு தங்கவைப்பதற்காக 1,215 எண்ணிக்கையிலான தன்னார்வலர்கள், 721 குடியிருப்பு நலச் சங்கங்கள் தயார்நிலையில் உள்ளனர்.

பெருநகர சென்னை மாநகராட்சி தலைமையிடத்தில் உள்ள ஒருங்கிணைந்த கட்டளை மற்றும் கட்டுப்பாட்டு மையத்தில் இருந்து தொடர்ந்து கண்காணிப்புப் பணிகள் மேற்கொள்ளப்படுகிறது. மழை வெள்ளத்தை அளப்பதற்காக 40 இடங்களில் வெள்ள அளவீட்டுக் கருவிகள், 55 மழைமானிகள், பொதுமக்கள் பாதுகாப்பு மற்றும் போக்குவரத்து சீர்செய்வதற்கு 17 சுரங்கப்பாதைகளில் தடுப்புத் தடிகள் (Boom barriers), மூன்று வட்டார துணை ஆணையாளர் அலுவலகங்களில் வட்டார ஒருங்கிணைந்த கட்டளை மற்றும் கட்டுப்பாட்டு மையங்கள் அமைக்கப்பட்டு தொடர்ந்து கண்காணிப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

மாநகராட்சிப் பகுதிகளில் விழும் மற்றும் ஆபத்தான நிலையில் உள்ள மரங்களின் கிளைகள் அகற்றப்பட்டுள்ளது. தாழ்வான பகுதிகளில் உள்ள பொதுமக்களை மீட்டு தங்கவைப்பதற்காக உள்ள 215 நிவாரண மையங்களில் மக்களுக்குத் தேவையான அடிப்படை வசதிகள் மேற்கொள்ளவும், தாழ்வான பகுதிகளில் உள்ள பொதுமக்கள் மீட்பதற்கு படகுகள் உள்ளிட்டவற்றை தயார்நிலையில் வைத்திட வேண்டும்.

மழைநீர் வடிகால்வாய் பணிகளையும், 115 விடுபட்ட இடங்களில் 1128 மீ. நீளத்தில் மேற்கொள்ளப்பட்டு வரும் மழைநீர் கால்வாய் இணைப்பு

ஏற்படுத்தும் பணிகளையும் விரைந்து மேற்கொண்டு மழைநீர் தங்குதடையின்றி செல்வதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும்.

மேலும் தற்போது நடைபெற்று வரும் சாலைப்பணிகளை விரைவில் முடித்திடவும், சாலை வெட்டுகள் ஏற்படுத்தப்பட்டுள்ள இடங்களில் உடனடியாக சாலைப் பணிகளை முடித்திடவும், சாலைப் பணிகளுக்காக பழைய சாலையை அகழ்ந்தெடுக்கும் பணிகளை மேற்கொள்ளும் போது உடனடியாக சாலை அமைத்து மக்களுக்கு சீரான போக்குவரத்தை ஏற்படுத்திட வேண்டும்.

வடகிழக்குப் பருவ மழையின் போது தேவையான அளவிற்கு மருந்துகள் இருப்பதை உறுதி செய்திடவும், மருத்துவர்கள் உள்ளிட்ட மருத்துவப் பணியாளர்கள் தயார் நிலையில் இருந்திடவும், தேவையான அளவிற்கு மருத்துவ முகாம்களை தொடர்ந்து நடத்திடவும் நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும்.

மேலும், பருவமழை தொடர்பாக 1913 என்ற உதவி எண்ணில் பொதுமக்கள் தெரிவிக்கும் புகார்கள் மற்றும் குறைகளை உரிய அலுவலர்களுக்கு தெரிவித்து உடனுக்குடன் நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும். மாநகராட்சிப் பகுதிகளில் எரியாத தெருவிளக்குகள், மழைநீர் தேங்கும் இடங்களைக் கண்டறிந்து உடனடியான சரிசெய்ய வேண்டும். குப்பைகளை உடனுக்குடன் அகற்றப்பட வேண்டும் என்ற மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சம்பந்தப்பட்ட அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

## நீர்வளத்துறை

நீர்வளத்துறையின் சார்பில் மேற்கொள்ளப்பட்டு வரும் கால்வாய் மேம்பாட்டுப் பணிகள், நீர்நிலைகளில் தூர்வாரும் பணிகள், கால்வாய்களில் உள்ள தடுப்புச் சுவர்களை உயர்த்தி கட்டும் பணிகள் உள்ளிட்டவற்றை பருவமழைக்கு முன்னதாக விரைந்து முடித்திட வேண்டும்.

மாநகராட்சிப் பகுதிகளில் ரூ.25.55 கோடி மதிப்பீட்டில் பக்கிங்ஹாம் கால்வாய், கூவம் மற்றும் அடையாறு ஆறுகளில் மேற்கொள்ளப்படும் பராமரிப்பு மற்றும் தூர்வாரும் பணிகளை விரைந்து முடித்திடவும், ரூ.80.63 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும் வெள்ளத் தடுப்பு பணிகளை விரைந்து முடித்திடவும் அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

## நெடுஞ்சாலைத்துறை

நெடுஞ்சாலைத்துறையின் சார்பில் 430 கி.மீ. நீளத்தில் மழைநீர் வடிகால்கள், 18,000 வண்டல் வடிகட்டித் தொட்டிகள், 815 எண்ணிக்கையிலான கால்வாய்கள் மற்றும் சிறுபாலங்கள் பணிகள், 16 எண்ணிக்கையிலான முக்கியமான பாலங்கள், 7 எண்ணிக்கையிலான வாகனப் பாலங்கள், 12 பாதசாரி சுரங்கப்பாதைகள் பராமரிக்கப்பட்டு வருகிறது.

பருவமழை முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக கால்வாய்கள், மழைநீர் வடிகால்கள் மற்றும் வண்டல் வடிகட்டித் தொட்டிகளில் தூர்வாரும் பணிகளை மேற்கொள்ளவும், சாலை வெட்டுப் பணிகள் மேற்கொண்ட இடத்தில் பணிகள் முடிந்தவுடன் சாலைகளை உடனுக்குடன் அமைத்திடவும், ஆபத்தான நிலையில் உள்ள மரங்களின்

கிளைகளை அகற்றிடவும், நடைபெற்று வரும் வெள்ளத் தடுப்புப் பணிகளை விரைந்து முடித்திட வேண்டும்.

ரூ.14.50 கோடி மதிப்பீட்டில் மேடவாக்கம் மற்றும் சோழிங்கநல்லூர் சாலையில் நடைபெற்று வரும் எல்காட் பாலம், ரூ.47.25 கோடி மதிப்பீட்டில் மேடவாக்கம் மற்றும் சோழிங்கநல்லூர் சாலையில் நடைபெற்று வரும் பெரிய வடிகால்கள், ரூ.70 கோடி மதிப்பீட்டில் OMR மற்றும் ECR சாலையில் நடைபெற்று வரும் பெரிய வடிகால்கள், ரூ.20 கோடி மதிப்பீட்டில் அணை ஏரி முதல் பள்ளிக்கரணை வரை நடைபெறும் பெரிய வடிகால்கள், பெரியார் பாதை சாலை உள்வட்டச் சாலையில் ரூ.6.37 கோடி மதிப்பீட்டில் நடைபெறும் வடிகால் பணிகளையும் விரைந்து முடித்திடவும், வெள்ளக் கண்காணிப்புக் குழுக்களை தயார்நிலையில் வைத்திடவும் அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

**சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம்**

ஓட்டேரி கால்வாய், ஒக்கியம் மடுவு கால்வாய், கூவம் ஆற்றை கடக்கும் இடம், கேப்டன் காட்டன் கால்வாய், மாம்பலம் கால்வாய், டிரஸ்ட்புரம் கால்வாய் ஆகியவற்றில் மேற்கொள்ளப்படும் பணிகள், CMRL பணிகளால் பாதிக்கப்பட்ட அனைத்து மழைநீர் வடிகால்களையும் சீரமைத்தல் உள்ளிட்ட பணிகளை விரைந்து முடித்திட அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

**சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியம்**

சென்னையில் 87 இடங்களில் உள்ள கழிவுநீர் இறைப்பு நிலையங்களில் 24 மணி நேரமும் செயல்படும் இணையவழி கண்காணிப்பு அமைப்புகளை நிறுவுதல், பிற மாவட்டங்களிலிருந்து கழிவுநீர் அகற்றும் லாரிகள், அனைத்து SPS மற்றும் WDS நிலையங்களுக்கும் பல்வேறு திறன் கொண்ட டீசல் ஜெனரேட்டர் தொகுப்புகள், பல்வேறு திறன் கொண்ட நீர் அகற்றும் பம்ப் செட்கள் ஆகியவற்றை வாடகைக்கு எடுத்து தயார்நிலையில் வைத்திருக்க வேண்டும்.

**தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் மின் பகிர்மானக் கழகம்**

சென்னையில் கடந்த ஆண்டுகளில் ஏற்பட்ட புயல் மற்றும் வெள்ளத்தால் பாதிப்புக்குள்ளாகக்கூடிய பகுதிகள் அடையாளம் காணப்பட்டுள்ள இடங்களில் முன்னேற்பாட்டுப் பணிகளை தயார்நிலையில் வைக்க வேண்டும்.

பாதிப்புக்குள்ளாகக்கூடிய பகுதிகளில் உள்ள 12,499 தாழ்வான மின் பகிர்மானப் பெட்டிகளின் உயரம், சாலை மட்டத்திலிருந்து 1 மீட்டர் அளவிற்கு உயர்த்தப்பட்டுள்ளது. சேதமடைந்த 9,546 குறைந்த மின்னழுத்த தூண் பெட்டிகள் (pillar boxes) சரிசெய்யப்பட்டன. 7,819 இடங்களில் வெளியே தெரிந்த நிலையில் இருந்த நிலத்தடி கேபிள்கள் சரிசெய்யப்பட்டன. தாழ்வான பகுதிகளில் அமைந்துள்ள துணை மின்நிலையங்களில், 37 மின்மாற்றிகளின் (Power Transformers) அடித்தள உயரம் 1 மீட்டராக உயர்த்தப்பட்டுள்ளது. தாழ்வான பகுதிகளில் அமைந்துள்ள துணை மின் நிலையங்களில் உள்ள 6 மின்மாற்றிகளின் (Power Transformers) மார்ஷலிங் பெட்டிகள் (Marshalling boxes) 1 மீட்டர் உயரத்திற்கு உயர்த்தப்பட்டுள்ளன. 1,201 கி.மீ. நீளத்திற்கு பழைய கடத்தி மாற்றப்பட்டுள்ளது. புயலைத் தாங்கும் திறனை மேம்படுத்த 916 கி.மீ

நீளமுள்ள விநியோகக் கம்பிகள் வலுப்படுத்தப்பட்டுள்ளன.

நடைபெற்று வரும் வெள்ளத் தடுப்பு மேலாண்மைப் பணிகளை விரைந்து முடித்திடவும், மழைக்காலங்களில் பொறுப்பு அலுவலர்களை நியமித்திடவும் அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

**தாம்பரம் மாநகராட்சி**

தாம்பரம் மாநகராட்சியில் நடைபெற்று வரும் மழைநீர் வடிகால்கள் பணிகளை பருவமழைக்கு முன்னதாக முடித்திடவும், பிற துறைகளின் சார்பில் அனுமதி பெற்று மேற்கொள்ள வேண்டிய பணிகளை உடனடியாக தொடங்கி முடித்திடவும் அறிவுறுத்தினார்.

**ஆவடி மாநகராட்சி**

நடைபெற்று வரும் மழைநீர் வடிகால் பணிகளையும், நிலத்தடி கழிவுநீர் சேகரிப்புத் திட்டக் குழாய் பதித்தல் பணிகளையும், குடிநீர் வழங்கல் குழாய் பதித்தல் பணிகளையும், ஆவடி மாநகராட்சியில் உள்ள மாதிரி நீர் விநியோக மண்டலங்களுக்கு 24 மணி நேரமும் நீர் விநியோகம் செய்தல் மற்றும் விடுபட்ட பகுதிகளுக்கான தற்போதைய நீர் விநியோகக் கட்டமைப்பை மேம்படுத்துதல் உள்ளிட்ட பணிகளை விரைந்து முடித்திடவும், பிற துறைகளின் சார்பில் அனுமதி பெற்று மேற்கொள்ள வேண்டிய பணிகளை உடனடியாக தொடங்கி முடித்திடவும் அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

இக்கூட்டத்தில் தலைமைச் செயலாளர் முனைவர் மு. சாய்குமார், இ.ஆ.ப., நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் திரு. ககன்தீப் சிங் பேடி, இ.ஆ.ப., அரசு முதன்மைச் செயலாளர்கள் முனைவர் சத்திய பிரத சாகு இ.ஆ.ப.,(நீர்வளத்துறை), திரு சுஞ்சோங்கம் ஜாதக் சிறு, இ.ஆ.ப., (நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை), மாநகராட்சி ஆணையாளர் டாக்டர் ஜி.எஸ்.சமீரன், இ.ஆ.ப., சென்னை பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியத்தின் மேலாண்மை இயக்குநர் திரு.த.ஆனந்த், இ.ஆ.ப., மாநகராட்சி ஆணையாளர்கள் மற்றும் நீர்வளத்துறை, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, மின்துறை, நெடுஞ்சாலைத்துறை பெருநகர சென்னை மாநகராட்சி, சென்னை குடிநீர் வாரியம், சென்னை மெட்ரோ இரயில் உள்ளிட்ட தொடர்புடைய துறைகளின் உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**செய்தி வெளியீடு: இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்,**
**பெருநகர சென்னை மாநகராட்சி.**